## 10. யோசிக்க வேண்டும்!

ராமு சந்தைக்குச் சென்றான்.
மிக அழகான பெரிய கோழி ஒன்றைப் பார்த்தான்.
அதை விலை பேசி வீட்டுக்கு வாங்கி வந்தான்.
கோழியும் தவறாமல் பெரிய தரமான முட்டை ஒன்றை இடும்.
அதை ராமு விற்று விடுவான்.
முட்டை நல்ல விலைக்குப் போவதை அறிந்தான்.
ஒரு நாள் ராமுவுக்கு பணக் கஷ்டம்.
சிறுதும் கூட யோசிக்காமல் கோழியின் வயிற்றை அறுக்கப் போனான்.
அதற்குள் அதிக முட்டை இருக்கும், அதை விற்றுப் பணம் பண்ணலாம் என்று எண்ணினான்.
"ராமு! கொஞ்சம் பொறு! கோழி முட்டை போடும், ஆனால் அதற்கு உரிய காலம் வர வேண்டுமே? அது கூடவா உனக்குத் தெரியாது?
கோழியை அறுத்தால் உள்ளே ஒன்றும் இப்போது இருக்காது,
கிடைக்கும் முட்டையும் போகும்; வேறு வழியை யோசித்துப் பார்"
என்று அவன் அப்பா கூறினார்.
தன் முட்டாள் தனத்தை உணர்ந்த ராமு அன்புடன் கோழியை வருடிக் கொடுத்தான்.